**<u>சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)</u>**
**<u>திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்</u>**
**<u>MCOP . No.56/2026</u>**

**<u>நாள் : 17.04.2026</u>**

**எ.ம.சா.** 1 (1ஆம் எதிர்மனுதாரர் தரப்பில்) வது நபரின் வாக்குமூலம் (1959)–ம் ஆண்டின் 54 வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி.கோமதி | மாவட்டம் | : | திருப்பத்தூர் |
| தந்தை / கணவர் பெயர் | : | திரு.சிவக்குமார் | வயது | : | 44 |
| ஊர் | : | பேர்ணாம்பட்டு | தொழில் | : | எலக்ட்ரிக்கல் கடை |
| வட்டம் | : | ஆம்பூர் | தேசியம் | : | இந்தியன் |

நான் இந்த வழக்கில் 1 ஆம் எதிர்மனுதாரர் அவன். அதன் உரிமையாளர் என்ற முறையில் வழக்கு விவரங்கள் எனக்கு பரிச்சையம் என்பதால் இந்த வழக்கில் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவை மற்றும் உண்மையானவை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை** :

TN 10 BF 2482 என்ற பொலிரோ பிக்கப் வாகனமானது நான் நடத்தி வரும் நிறுவனத்திற்கு சம்பந்தப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வாகனத்திற்கு எதிராகத்தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் எங்களது வாகனத்தை ஓட்டிச் சென்ற ஓட்டுநர் பெயர் இளையராஜா. நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்த தேதியன்றே மேற்படி வாகனமானது மோட்டார் வாகன ஆய்வுக்கு அனுப்பிவைக்கப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி வாகனமானது திருப்பத்தூர்

கிராமிய காவல் நிலையத்தாரால் மோட்டார் வாகன ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி வாகனமானது 2ஆம் எதிர்மனுதாரர் நிறுவனத்திடம் காப்பீடு செய்யப்பட்டது என்றால் சரிதான். இளையராஜாவுக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளதா என்றால் ஆமாம். விபத்தானது எனது நிறுமத்திற்கு சொந்தமான வாகனத்தை ஓட்டிச் சென்ற இளையராஜாவின் கவனக்குறைவால் ஏற்பட்டதால் அதன் உரிமையாளர் என்ற முறையில் நானும், 2ஆம் எதிர்மனுதாரர் நிறுவனமும் நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டுள்ளோம் என்றால் சரியல்ல. விபத்து நடந்த விதம் குறித்து நான் கூறியுள்ள சங்கதிகள் ஏற்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

**4ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை** :

விபத்து குறித்து எனக்கு சொந்தமான பொலிரோ பிக்கப் வாகனத்திற்கு எதிராகத்தான் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது வாகனத்தை ஓட்டிச் சென்ற இளையராஜாவை கைது செய்து நிலைய பிணையில் விடுவிக்கப்பட்டாரா என்றால் இல்லை. சாட்சி தனது வாகனம் விபத்தில் சம்பந்தப்படவில்லை என்று கூறுகிறார். எனது வாகன ஓட்டுநரை விசாரித்தால் உண்மை நிலவரம் தெரியவரும் என்றால் சரிதான்.

ஒம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி(FAC),
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.